உ

12 - 02 - 2002



## திருமதி ம. கனகம்மா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து மலர்ந்த

# கனக புஷ்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



சிவபதம் அடைந்த

அமரர்

# திருமதி ம. கனகம்மா

அவர்கள்

**1927 - 08 - 10**
பிறப்பு

**2002 - 01 - 13**
இறப்பு

## திதிவெண்பா

ஆண்டு விஷு அணி திங்கள் மார்கழி
பூண்ட அமாவாசையதனில் - நீண்ட புகழ்
மாண்புறு கனகம்மா எனும் மாது எமைவிட்டு
மலரவன் தாள் புகுந்தனளே யென்றறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## நெஞ்சத்தின் நீங்கா நினைவலைகளில் திகழும்
## எமது குடும்பத் தலைவன்



சிவபதம் அடைந்த

அமரர்

# திரு. இ. மயில்வாகனம்

அவர்கள்

**1917 - 07 - 21**
பிறப்பு

**1991 - 05 - 09**
இறப்பு

## திதிவெண்பா

ஆண்டு பிரசோற்பத்தி அமைந்த வைகாசித் திங்கள்
ஈண்டு தசமித் திதியதனில் – எங்கள்
மயில்வாகன னெனுஞ்சீர் கனவான் எமைவிட்டு
கைலாயபதி ஏகினனே காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், தொட்டிலடியை வாழ்விடமாகக் கொண்டவருமான

அமரர்

**திருமதி ம. கனகம்மா**

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து மலர்ந்த

# கனக புஷ்பம்

தொகுப்பு, பதிப்பு, வெளியீடு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய வணக்கம்

காசினியிருளை நீக்குங் கதிரொளியாகி யெங்கும்
பூசனையுலகோர் போற்றப் புசிப்பொடுசுகத்தை நல்கும்
வாசியேழுடையதேர்மேன் மாகிரி வலமாய்வந்த
தேசிகா வெனைரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி.

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

ஆயிரம் கரங்கள் நீட்டி
அணைக்கின்ற தாயே போற்றி
அருள் பொங்கும் முகத்தைக்காட்டி
இருள் நீக்கம் தந்தாய் போற்றி
தாயினும் பரிந்து சாலச்
சகலரை அணைப்பாய் போற்றி
தழைக்கும் ஓர் உயிர்கட் கெல்லாம்
துணைக்கரம் கொடுப்பாய் போற்றி
தூயவர் இதயம் போல
துலங்கிடும் ஒளியே போற்றி
தூரத்தே நெருப்பை வைத்துச்
சாரத்தைத் தருவாய் போற்றி
ஞாயிறே! நலமே போற்றி
நாயகன் வடிவே போற்றி
நானிலம் உளநாள் மட்டும்
போற்றுவோம் போற்றி,

கண்ணதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

திருவுங் கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

### பண் : தக்கராகம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவ மென்கொலோ.

### பண் : யாழ்மூரி

மாதர்ம டப்பிடியும்மட அன்னமு'ம்) அன்னதோர்
நடையுடை மலைமகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசைபாடவு(ம்) ஆடுவர்
அவர்படர் சடைந்நெடு முடியுதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்திரை
இரைந் நுரை கரை பொரு துவிம்மி நின் றயலே
தாதவிழ் புன்னைதயங் குமலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபுரம் பதியே.

### பண் : செந்துருத்தி

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்த்து போதீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்(து)உன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த் துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
எனைக் கண்டு கொள்ளே.

கண்களிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடு மகாதே
மாலறியா மலர்ப்பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலோ டாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டி நன்னாடுடையான்படை யாட்கெள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதொர் வேதகம் வந்து வெளிப்படும் ஆகாதே
மீன் வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே.

## திருவிசைப்பா

இவ்வரும் பிறவிப் பௌவ நீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
அஞ்ச லென்றருள் செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்த செஞ்சாலிக்
கடைசியர் களைதருநீலஞ்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

என்னையுன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலா முருக நீ யெளி வந்
துன்னை யென் பால் வைத்தெங்கு மெஞ்ஞான்று
மொழிவற நினைந்த வொண்சுடரே
முன்னை யென் பாச முழுவதுமகல
முகத்தலையகத் தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனு மாரமுதுங்
கனிவு மாயினியை யாயினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
எங்குங்குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிருவாரூரில்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியா ரொடும் கூடி யெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

மன்னுகதில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்துபுவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோனடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்கு பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்களிற்றைக் கருத்து ளிருத்துவாம்.

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மை தரு செய்ய தமிழ்பார் மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்று விழி நால்வாய்
யானை முகனைப் பரவியஞ்சலி செய்கிற்பாம்.

## திருப்புகழ்

நிலையாப் பொருளை உடலாக் கருதி
நெடுநாட் பொழுது மவமேபோய்
நிறைபோய்ச் செவிடு குருடாய்ப் பிணிகள்
நிறைவாய்ப் பொறிகள் தடுமாறி
மலநீர்ச் சயன மிசையாப் பெருகி
மடிவேற் குரிய நெறியாக
மறைபோற் றரிய வொளியாய்ப் பரவு
மலர்தாட் கமல மருள்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமியத் தழுத்தி பிளையாதே
காலர் கைப்படிந்து மடியாதே
ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்தி லன்பு மருள்வாயே
தூயமெய்க் கணிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர்வேலா
எமவெற் புயர்ந்த மயில்வீரா
ஏரகத் தமர்ந்த பெருமாளே!

கலந்த மாதும் கண்களி உறவரு புதல்வோரும்
கலங்கி டாரென்(று) இன்பமு றுலகிடை கலிமேவி
உலர்ந்தகாயங் கொண்டுளம் உறுதுயர் உடன் மேவாது
உகந்த பாதந் தந்துனை உரைசெய அருள்வாயே
மலர்ந்த பூவின் மங்கையை மருவரி மருகோனே!
மறஞ்செய் வார் தம் வஞ்சியை மருவிய மணவாளா
சிலம்பினோடுங் கிண்கிணி திசைதொறும் ஒலிவீசச்
சிவந்த காலுந் தண்டையும் அழகிய பெருமாளே!

## விஷ்ணு ஸ்தோத்திரம்

பச்சைமாமலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேற ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை வேண்டேன் அரங்கமா நகருளானே.

குலந்தரும் செல்வந்தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கனணி நிறமுங் கண்டேன் செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன் பரனின்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ
மருப் பொசிந்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.

## துர்க்கை

ஆதியா யந்தத்தினந் தமாய் நின்றோர்க்குப்
பாதியாய் யொன்றாய்ப் பலவாகிப் பல்லுயிராய்ப்
பேதியா நின்றாய் பெருமாட்டி நின்பெருமை
சோதியா நின்றார்க் கெளிதன்றே துல்லவமே.

ஓரெட்டிதழ் வட்டத் துள்ளாய சட்கோணம்
பாரித்த முக்கோண வட்டப் பராபரையே
வாரிப்படு நஞ்சமுதாக்கும் வால் வளைக்கை
வேரிக் கரும்பே வித்தின்றி விளைமூலமே.

## இலக்குமி

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரும்
எழின்மேனித் திருவே வேலை
அங்கணுல கிருள்துரக்கு மலர்க்கதிராய்
வெண்மதியா யமரர்க் கூட்டும்
பொங்கமுத லாயுல களிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குளைநீ யவணன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங் கியிருப்ப தம்மா.

## சரஸ்வதி

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய உணர்விக்கு மென்னம்மை — தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா இடர்.

படிகநிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரை போற் கையுந் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தாற்
கல்லுஞ் சொல் லாதோ கவி.

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவுதோ திருந்திடு நலங் கொள் வாணிதன்
பூவடி முடிமிசை புனைந்து போற்றுவாம்.

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் – வெள்ளை
அரியாசனத்தில் அரசரோ டென்னைச்
சரியாசனம் வைத்த தாய்.

வெள்ளைத் தாமரை பூவில் இருப்பாள்
வீணைசெய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவுகவிதை
கூறுபாவலர் உள்ளத்திருப்பாள்
உள்ளதாம் பொருள்தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்துட் பொருளாவாள்.

## அபிராமி துதி

தனம்தரும் கல்விதரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள் அபிராமி கடைக்கண்களே.

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழிபிணியிலாத உடலும்
சலியாத மனமுமன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலு மொரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பு முதவிப் பெரிய
தொண்ட ரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயில் கொள் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி
அருள்வாய் அபிராமியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்ன னடிபோற்றி
சீர்ஆர் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமா றொன்றும் அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்துஇளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்அடிகள் கண்டுஇன்று வீடுஉற்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வயிற் குடிலை
மலங்கப் புலனைந்துப் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்தும் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா மல்லையுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

★★★★★★★★★★★★

ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றிருக்கிறானோ, அந்தளவு அதிகமானவற்றையும், மேலானவற்றையும் எளிதாகப் புரிந்து கொள்கின்றான். ஏனெனில் அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகிறான்.

— தெளிவு

★★★★★★★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நலையறு காட்சி நல்கி
என்னையு மடியனாக்கி யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி.

## நீங்களும் வாழ்ந்து பாருங்கள்

| | | |
|---|---|---|
| அன்பில் | — | நெகிழ்வு |
| அறிவில் | — | தெளிவு |
| ஆக்கத்தில் | — | ஊக்கம் |
| வாழ்வில் | — | எளிமை |
| உண்மையில் | — | உயிர்ப்பு |
| உழைப்பில் | — | ஓய்வின்மை |
| கொள்கையில் | — | உறுதி |
| இயற்கையில் | — | ஈடுபாடு |
| துன்பத்தில் | — | துணைநிலை |
| புலமையில் | — | ஆழம் |
| ஆராய்சியில் | — | நடுநிலமை |
| இல்லத்தில் | — | துறவு |
| பதவியில் | — | பகட்டின்மை |
| புரட்சியில் | — | முதன்மை |
| பண்பில் | — | சால்பு |
| அறத்தில் | — | நம்பிக்கை |
| புகழில் | — | மயங்காநிலை |
| செல்வத்தில் | — | செருக்கின்மை |
| விளம்பரத்தில் | — | விருப்பமின்மை |
| தமிழில் | — | தமிழ்நெஞ்சம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகர் அருளிய

# திருப்பொற் சுண்ணம்

(ஆநந்த மனோலயம்)

திருச்சிற்றம்பலம்

முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோதியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யானறம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 1

பூவியல் வார்சடை யெம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும் வந் தெம்மையாடச்
செம்பொன் செய் சுண்ண மிடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற் சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன் பெருமான்
அழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தர மாளுமை யாள் கொழுநற்
கேய்ந்த பொற் சுண்ணம் மிடித்துநாமே. 3

காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரிய
ருலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காணவுல கங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ண மிடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழா மெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்பத்
நாமு மவர்தம்மை யார்ப்ப வார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்ன கோவுக்
காடப் பொற் சுண்ண மிடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை யார்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோறெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
யாட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
யாடப் பொற்சுண்ண மிடித்துநாமே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையக மெல்லா முரலதாக
    மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்சன் நிறையஅட்டி
    மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
    செம்பொ னுலக்கை வலக்கைபற்றி
ஐய னணிதில்லை வாணனுக்கே
    யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 9

முத்தணி கொங்கைக ளாடவாட
    மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
    செய்கையற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
    பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
    வாடப் பொற்சுண்ண மிடித்துநாமே. 10

மாடு நகைவா ணிலாவெறிப்ப
    வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
    பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமினெம் பெருமானைத் தேடிச்
    சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
பாடுமி னம்பலத் தாடினானுக்
    காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
    மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை யையர்பி ரானைநம்மை
    அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம்பொய்யனை மெய்யர் மெய்யைப்
    போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
    பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையனெம் மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 13

சங்க மரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப வராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ண மிடித்துநாமே. 15

ஆவகை தாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரு மிம்பரு முய்யவன்று
போனக மானகஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே. 17

அயன்றலை கொண்டு செண் டாடல்பாடி
யருக்க னெயிறு பளித்தல் பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல்பாடி
யிளைந்தன முப்புர மெய்தல்பாடி
யேழை யடியேமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடி நின் றாடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம் மேல்
இட்டுநின் றாடு மரவம் பாடி
யீசற்குச் சுண்ண மிடித்துநாமே. 19

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்மையும் பொய்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்கு
பந்தமுமாய் வீடு மாயினார்க்குப்
காதியு மந்தமு மாயினார்க்குக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடற்கூற்றுவண்ணம்

தன தன தான தன தன தான
தந்த தனந்தன தந்த தனந்தன
தனன தனந்த தனன தனந்த
தானன தானன தானன தந்த
தந்ததன தான தனதானா.

ஒருமடமாது மொருவனு மாகி
யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
ஊறு சுரோணித மீதுகலந்து—

பனியிலொர்பாதி சிறுதுளி மாது
பண்டியில்வந்து புகுந்துதிரண்டு
பதுமவரும்பு கபடமிதென்று
பார்வை மெய்வாய் செவிகால் கைகளென்ற—

உருவமுமாகி யுயிர்வளர்மாத
மொன்பது மொன்று நிறைந்துமடந்தை
யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும் வாரமு நாளுமறிந்து—

மகளிர்கள்சேனை தரவணையாடை
மண்படவுந்தியு தைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகி வளர்ந்து—

ஒளிநகையூற விதழ்மடவாரு
வந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியிலிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப—

உடை மணியாடை யரைவடமாட
வுண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபால ரொடோடி நடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தருஞான குருவுபதேச
முத்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து—

மயிர்முடி கோதி யறுபதநீல
வண்டிமிர் தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க—

மதன சொரூப னிவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரி விழி கொண்டு சுழியவெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு—

மனது பொறாம லவர்பிறகோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—

ஒருமுதலாகி முதுபொருளாயி
ருந்ததனங்களும் வம்பிலிழந்து
மதன சுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து—

வளமையுமாறி யிளமையுமாறி
வன்பல்விழுந்திரு கண்களிருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து
செய்கை யினிலோர் தடியுமாகியே—

வருவதுபோவ தொருமுது கூனு
மந்தியெனும்படி குந்திநடந்து
மதியுமிழந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமல் மொழிந்து—

துயில் வருநேர மிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சமு முலர்ந்துவறண்டு
துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியுகமீதி லிவர்மரியாதை
கண்டிடுமென்பர் சஞ்சலமிஞ்ச
கலகலவென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து—

தெளிவுமிராம லுரைதடுமாறி
சிந்தையு நெஞ்சமு முலைந்துமருண்டு
திடமுமுலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதென நொந்து—

மறையவன்வேத னெழுதியவாறு
வந்தது கண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினியெனநொந்த
மேதினிவாழ்வு நிலாதினி நின்ற—

கடன்முறை பேசு மெனவுரை நாவு
றங்கிவிழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிடவந்து
பூதமு நாலு சுவாசமுநின்று—
நெஞ்சுதடுமாறி வருநேரமே,

வளர் பிறைபோல வெயிறுமுரோம
முஞ்சடையுஞ் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல் யமதூதர்கள் வந்து—

வலைகொடு வீசி யுயிர்கொடுபோக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் காலமறிந்து—

பழையவர் காணு மெனுமயலார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர்பந்த
ரிடுமெனவந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியுமென்று—

பலரையுமேவி முதியவர் தாமி
ருந்தசவங்கமு வுஞ்சிலரென்று
பணிதுகில் தொங்கல் களபமணிந்து
பாவகமே செய்து நாறுமுடம்பை—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசை கெடாம லெடுமேனவோடி
வந்திளமைத்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலையடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து—

விறகிடமூடி யழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்க
ளுருகி யெலும்பு கருகி யடங்கி
யோர்பிடிநீறு மிலாத வுடம்பை
நம்புமடி யேனை யினியாளுமே.

♥♥♥♥♥♥

## தனிப்பாடல்கள்

முடி சார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடி சாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படி சார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவ
ரடி சார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே.

பிறவா திருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்து விட்டா
லிறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பல வாண ரடிக்கமல
மறவா திருமன மேயது காணன் மருந்துனக்கே.

கையொன்று செய்யவிழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சகநாவொன்று பேசப் புலால் கமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை யெவ்வாறு கொள் வாய்வினைதீர்த்தவனே.

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினை யுன்னாதே - பருத்த தொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்கும் தான்.

என்செயலாவ தியாதொன்று மில்லை யினித் தெய்வமே
உன் செயலே யென் றுணரப் பெற்றேனிந்த வூனெடுத்த
பின் செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன் செய்த தீவினை யோவிங்ங னேவந்து மூண்டதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயிரண்டு திங்களா லங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பேனினி.

மாத வுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே - நாதா
விடுப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா.

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் - பட்டதுபட்
டெந் நேரமுஞ் சிவனையேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம்.

ஊருஞ் சதமல்ல; உற்றார் சதமல்ல; உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல; பெண்டீர் சதமல்ல; பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல; செல்வஞ் சதமல்ல; தேசத்திலே
யாருஞ் சதமல்ல. நின்றாள் சதங்கச்சி யேகம்பனே!

நாறுமுடலை, நரிப்பொதி சோற்றினை, நான்றினமுஞ்
சோறுங் கறியு நிரப்பிய பாண்டத்தைத், தோகையர்தங்
கூறுமலமு மிரத்தமுஞ் சோருங் குழியில்விழா
தேறும் படியருள் வாயிறை வா!கச்சி யேகம்பனே!

என்பெற்ற தாயரு மென்னைப் பிணமென் றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம்வந்து குடமுடைத்தார்
உன்பற் றொழிய வொருபற்று மில்லை யுடையவனே.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையிற் கானுழைத்துக் கொண்டே
ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல வகப்பட் டீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்வல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேவுப தேசமிதே.

# சிந்தனை விருந்து

## துணை

நாம் ஒவ்வொருவரும் பிரயாணத்திலேயே இருக்கின்றோம். நாம் தூங்கும்போதும் இருக்கும்போதும் பிரயாணம் நடந்துகொண்டேதான் இருக்கின்றது. அந்தப் பிரயாணம் விரைவாகவும் போய்க் கொண்டிருக்கின்றது. 'சாமாறே விரைகின்றேன்' என்பார் மாணிக்க வாசகர். நெடுந்தூரம் போகின்றவர்கள் நல்ல துணையுடன் போவது நல்லது. ''துணையோடல்லது நெடுவழி யேகேல்'' என்கின்றார் ஔவையார்.

நாம் தக்கவர்களைத் துணை பற்றினால் எல்லா நலன்களும் உண்டாகும். பாலமில்லாத ஒரு நதியைக் கடக்க எண்ணிய ஒருவன், தனது காளை மாட்டை நதியில் நீந்த விடுத்து அதன் வாலைப் பற்றிக்கொண்டான்: பயமின்றி அக்கரை சேர்ந்தான். அதைக்கண்ட ஒரு பேதை தான் கையில் சங்கிலியுடன் பிடித்திருந்த நாயை நதியில் நீந்தவிட்டு அதன் வாலைப் பற்றினான். நாயும் அவனும் நதியில் ஓடுகின்ற தண்ணீரில் மாண்டார்கள். அதுபோல் சிறியாரைத் துணை பற்றியவன் பிறவியலையாற்றைக் கடக்கமாட்டாது துன்புறுவான்; அறிவும் அனுபவமும் மிகுந்த ஆன்றோர்களைத் துணை பற்றியவன், பிறவியலையாற்றைக் கடந்து இன்பமுறுவான்! ஆதலினால் ஔவை யார் ''பெரியாரைத் துணைகொள்'' என்று கூறியிருக்கின்றார்கள்.

பெரியார் என்றால் யார்? உடம்பினாலே, உயரத்தினாலே, தனத்தாலே, அழகாலே, பதவியினாலே, படிப்பினாலே உயர்ந்தவர்கள் எல்லோரும் பெரியார்கள்தானா? இல்லை செயற்கரிய செய்பவர்களே பெரியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்" — திருக்குறள்.

இனி அப்பெரியவர்களைத் துணைகொண்டு அவர்களை நம்மவராகக் கொண்டு வாழ்வதே மேலான தன்மை.

"அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்" — திருவள்ளுவர்.

அப்பெரியவர்களுள் தலையாயவன் இறைவன். அவனையே "பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே" என்கின்றார் அப்பரடிகள்.

இறைவன் வேண்டுதல் வேண்டாமை யிலாதான்; தனக்குவமையில்லாதான்; அறவாழி அந்தணன். அப்பரமபதி பொதுவாக எல்லாருக்கும் அருந்துணையாக இருக்கின்றான். சிறப்பாகத் தன்னை யடைந்த அடியார்கட்குப் பெருந்துணையாக இருந்து அருள்புரிகின்றான்.

அருந்துணையை அடியவர்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

என்றார் அப்பரடிகள்,

ஆகவே மரண யாத்திரையில் சென்று கொண்டிருக்கின்ற ஆன்மாக்கள் இறைவனைத் துணையாகக் கொள்ளவேண்டும்.

இறைவன் ஆன்மாக்களுக்கு வரும் இடையூறுகளை நீக்கி. அவ்வப்போது ஆவன அறிந்து செய்வான்.

"கனத்த செந்தமிழால் நிலையே தினம்
நினைக்கவும் தருவாயுன தாரருள்
கருத்திருந்துறை வாவென தாருயிர் துணையாக"
என்கின்றார் அருணகிரிநாதர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுனியைத் துணை பற்றினான் துரியோதனன்; குலத்துடன் அழித்தான். கண்ணபிரானைத் துணை பற்றினான் அருச்சுனன்; எல்லா நலன்களையும் பெற்றான்.

பதினான்காவது நாள்போரில் துரியோதனனுக்குத் துணையாக வந்த வருணராஜகுமாரன் சுதாயு என்பான், தனஞ்சயனைக் கொல்லும் பொருட்டு தன் தந்தை தனக்குத் தந்த சிறந்த வஜ்ராயுதத்தை விடுத்தான். அர்ச்சுனன், அக்கதையை அழிக்க ஆயிரம் பாணங்களை விடுத்தான். அப்பாணங்களையெல்லாம் அக் கதாயுதம் அழித்து அவனை நோக்கி வந்தது. அமரர்கள் அஞ்சினார்கள். அர்ச்சுனனும் கலங்கினான். அக்கதாயுதம் அர்ச்சுனன் அருகில் வந்ததும் அவன் தேரைச் செலுத்துகின்ற கண்ணபிரான், தேர் ஓட்டுகின்ற கோலைக் கீழே வைத்துவிட்டு தன் மார்பைக் காட்டினார். கதை கண்ணன் மார்பில் மலையில் இடி விழுவதுபோல் பட்டது. அதை விடுத்த சுதாயுவின் தலை ஆயிரம் துண்டுகளாக வெடித்து மாண்டான். கண்ணனை வணங்கிக் காரணம் கேட்டான் அர்ச்சுனன். ''நிராயுதன் மீது இக்கதையை விடுத்தால் உன் தலை வெடிக்கும்'' என்று இவன் தந்தை கட்டளையிட்டிருந்தான். அதனால் இவ்வாறு நிகழ்ந்தது'' என்று கண்ணபிரான் கூறினார். அர்ச்சுனன் அகமகிழ்ந்தான்.

ஆதலால் நாம் எப்போதும் பெரியவர்களைத் துணை கொண்டு இன்புறுவோமாக.

''தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெள்ளாந் தலை'' — தமிழ்மறை

---

## பெண்

பேணுந் தன்மை வாய்ந்தவள் பெண்; அழகுக்கு உறைவிடம் ஆதலால் மாது எனப்படும் பெண்மையில் கற்பெனும் திண்மையமைந்துள்ளது. இந்தப் பாரத நாட்டிற்குப் பெரும் புகழை விளைவிப்பவர்கள் மூவர். கற்புடைய மாதர்கள், பக்தர்கள்; தத்துவஞானிகள். இம்மூவரில் முதலில் நிற்பவர் கற்புடைய பெண்டிர், ''பத்தினி பக்தர்கள் தத்துவஞானிகள்'' என்று கூறுகின்றார் திருமூலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாட்டினில் கற்புடைமை அதிகம். பலப்பல பதிவிரதா சிரோன்மணிகள் வாழ்ந்தார்கள் என்ன தீமை நாட்டிற்கு வந்தாலும் கற்புக்கு இடர் வரக்கூடாது. பக்தர்களையும் முத்தர்களையும் சித்தர்களையும் பெறுகின்றவர் பத்தினிகள்தானே, கற்புடைய மாதர்கள் இருப்பாராயின் மீண்டும் நாட்டிற்குத் தேவையான பல ஆன்றோர்களை நமக்குத் தருவார்கள்,

பெண்ணிற்குத் தமிழகம் பெருமை கொடுத்த அளவில் வேறு நாடு தரவில்லை. பெண்களால் வாழ்ந்த நாடு இந்நாடு நீதி நெறிகளை வாழ வைத்தவர் ஒளவையார்; சைவவுலகுக்கு உயிர் கொடுத்தவர் மங்கையற்கரசியார்; வைணவ உலகுக்கு வாழ்வு தந்தவர் ஆண்டாளம்மையார். மேலும் திலகவதியார்; திருவெண்காட்டு நங்கையார், மாதினியார், இசைஞானியார் போன்ற பல பெண் மணிகள் இந்நாட்டை அலங்கரித்தார்கள்.

இனி பெண்ணில்லையானால் வாழ்வு இல்லை; வீட்டிற்கு உரியவளே பெண்தான். அதனால் ''இல்லாள்'' எனப்படுகின்றாள். இல்லான் என்று ஆடவனைக் கூறினால் ஒன்றுமில்லாதவன் என்று பொருள்படும். இல்லாள் என்றால் வீட்டை ஆளுகின்றவள் என்று பொருள். ''இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை'' என்கின்றார் ஒளவையார்.

மனைவியென்று பெண்ணுக்குப் பேருண்டு, மனைவன் என்று ஆணுக்குப் பேரில்லை. இந்த உலகமே பெண் மயமாக அமைந்துள்ளது. செல்வத்தைத் தனலட்சுமி யென்றும், தானியத்தை தான்ய லட்சுமி யென்றும், வீட்டைக் கிரகலட்சுமி யென்றும், கிராமத்தைக் கிராமதேவதை என்றும், தேசத்தை இந்தியத்தாய் என்றும், பாரத மாதா என்றும், கல்வியை கலைவாணி யென்றும், வலிமையைப் பராசக்தி யென்றும், ஞானத்தை ஞானாம்பாள் என்றும், தண்ணீரைக் கங்காதேவி யென்றும், மண்ணினைப் பூமிதேவி என்றும், பேசும் மொழியைத் தாய்மொழி என்றும், நாம் பிறந்த நாட்டைத் தாய்நாடு என்றும் இவ்வாறு எல்லாவற்றையுமே பெண்ணின்பேரால் அமைத்து மகிழ்வதனால் பெண்ணின் பெருமை வலியுறுகின்றது.

அன்பும் இரக்கமும் பெண்ணிடத்தில் அதிகமாகக் குடிகொண்டிருக்கின்றன. அதனாலேயே இறைவன் பிள்ளைப் பேற்றைப் பெண்ணிடமாகவே அமைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறப்பண்பும் பெண்ணிடம் அமைந்துளது. ''அறம் வளர்த்த நாயகி'' ''தர்ம சம்வர்த்தனி'' என்று அம்பிகையைக் கூறுவதனாலும் வருகின்ற ஏழைகள் ''அம்மா பிச்சை'', ''பார்வதா பிச்சை'' என்று அழைத்துக் கேட்பதனாலும் அறிக.

கணவனுக்கு ஆயுள், புகழ், பெருமை, செல்வம், நோயின்மை முதலிய யாவும் மனைவியினாலேயே வருகின்றன. ''ஏரைப் பிடித்தவன் என் செய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்'' என்ற பழமொழியாலும், ''மதுரைச் சொக்கர் ஞானம் மிகப் பெற்று வாழ்வதெல்லாம் சொக்க நாயகியாள் பானை பிடித்த முகூர்த்தத்தினால் வந்த பாக்கியமே'' என்ற பாடலாலும் அறிக.

காக்கைப்பாடினியார், நச்செள்ளையார் முதலிய சங்க காலத்துப் பெண்களும், நளாயணி, தமயந்தி, சந்திரமதி, அநசூயை, வாசுகி முதலிய பெண்களும் பெண்ணுலகிற்கு அழியாத புகழைத் தேடி வைத்தார்கள்:

நாம் பெண்மையடைந்தாலன்றி முத்தி இன்பம் கிடையாதென்பதையும் சாத்திரத்தாலறிக.

அறிவு என்பது பெண்ணிடத்திலே மிகவும் கூர்மையாக அமைந்துளது. ஒரு சமயம் பொய்யாமொழிப் புலவர் மதுரைக்கு வந்திருந்தார். நான்காவது சங்கம் நிறுவிச் செந்தமிழை வளர்க்கும் பொருட்டு வணங்காமுடிப் பாண்டியனைக் கண்டு தன் கருத்தை அறிவித்தார். பாண்டியன் அவருக்கு வேண்டிய உபசாரஞ் செய்து இருத்தினான்.

மன்னன் பின்னர் அரச கருமங்களினால் புலவர் வந்த கருமத்திலே கவனஞ் செலுத்தினானில்லை, புலவர் வெகுண்டார். ''மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ உன்னை யறிந்தோ தமிழை யோதினேன்'' என்று கூறும் உறுதியுடைய புலவர் மரபில் வந்தவர் பொய்யாமொழியர். பல்லக்கில் ஏறி மதுரையை விட்டுச் சீற்றமுற்றுப் புறப்பட்டார். புலவர் வெருண்டால் நாடு நலமுறாது. இதனை ஒரு தூதன் அரண்மனையில் பாண்டிமாதேவியிடம் கூறினான். அந்த வேளையில் பாண்டியன் உறங்கிக் கொண்டிருந்தான்.

அரண்மனையிலிருந்து ஒரு இளம் வீரன் புறப்பட்டு விரைந்து சென்று புலவருடைய பல்லக்கைத் தாங்கிச் சுமந்தான். பல்லக்கு ஆடியது. புலவர் ''காரணம் என்ன'' என்று வினாவினார். புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் ஒருவன் சுமப்பதாக அறிந்தார். பல்லக்கைவிட்டு இறங்கிப் பார்த்தார். ,'அம்மணி! பாண்டிமாதேவி! என்ன விந்தை? தாங்கள் ஆண் உடை உடுத்து வந்து பல்லக்கு சுமப்ப'து முறையா? என்று கேட்டார்?. உடனே அரசமாதேவி தொப்பி நிஜார் அங்கி முதலி யவைகளைக் களைந்தெறிந்து, புலவரைத் தொழுது. "பெருமானே! என் கணவனார் அரச கருமத்தினால் தாங்கள் வந்த கருமத்திற் கவ னஞ் செலுத்தாதிருந்தார். அதை மன்னிக்கவேணும்' என்றாள்.

பொய்யாமொழிப் புலவர் அந்த அம்மையாருடைய அறிவின் திறத்தை மெச்சிப் பாடுகின்றார்.

உமையாளும் நீயும் ஒருங்கொப்பே ஒப்பே
உமையாளுக் கங்குண்டோ ரூனம் – உமையாள் தன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியனின்
ஆகந்தோய்த் தாண்டான் அரசு.

உமையாளை மணந்த சிவனார் பிட்சாடனராய் திரிந்தார். உன்னை மணந்த பாண்டியன் அரசு புரிகின்றான் என்று புகழ்ந்து, மீண்டும் மதுரை வந்து சங்கத்தை நிறுவி பாண்டியனையும் பாண்டி நாட்டையும் வாழ்த்தினார்.

ஆனபடியால் விண்ணுலகமும் மண்ணுலகமும் பெண்ணுல கத்தினால் விளக்கம் பெறுகின்றன.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்"

★★★★★★★★★★

---

உலக நேயம் யாண்டும் பேசப்படுகிறது. அந்நேயம் பரவாமைக் குக் காரணம் நாடு, மொழி, நிறம், பகுப்பு முதலிய புறவேற்று மைகளில் மக்கள் கருத்தைப் பதித்திருப்பதேயாகும். மக்கள் அக் கருத்தைச் சிறிது அகமுகமாகத் திருப்பி ஆன்ம ஆராய்ச்சியிற் செலுத் தின் அங்கே எவ்வேற்றுமையும் காணப்படா. அவ்வான்ம ஆராய்ச் சியே சமயக்கல்வி என்பது மற்றக்கல்வித் துறைகள் யாவும் சமயக் கல்விக்கு உடல் போன்றன.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரம்

நாம் என்ன செய்யவேண்டும்? என்ன செய்து கொண்டிருக்கின்றோம்? செய்ய வேண்டிய கருமங்களுள் முக்கியமும் முதன்மையும் ஆனது எது? முந்தி செய்ய வேண்டியது எது? சற்று பிந்திச் செய்ய வேண்டியது எது! என்ற சிந்தனைகள் அறிவு படைத்தவன் உள்ளத்தில் தோன்றாமலிருக்க முடியாது.

ஒருவனுக்குத் தலைமயிர் தீப்பற்றிக் கொண்டது. உணவும் உறக்கமும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்றாலும் அவைகளை அவன் அப்போது விரும்பமாட்டானல்லவா? தலைமயிர் எரியுந் தருணத்தில் அவசரமாகத் தேடவேண்டியது தண்ணீர் ஒன்று தானே.

நாம் இந்த வகையில் மிகவும் கவனக் குறைவாக இருக்கின்றோம். முந்தி செய்ய வேண்டியதைப் பிந்தி செய்கின்றோம். செய்ய வேண்டியதைச் செய்யாமலும் இருக்கின்றோம். செய்ய வேண்டாததையும் செய்து கொண்டிருக்கின்றோம்.

மரணபயம் தலைக்குமேலிருக்கின்றது. எந்தக் கணத்திலும் அது வரும், மேலே எறிந்த கல் கீழே விழாமற் போகாது, அது போல் உடம்பெடுத்த நாம் மரணமடைந்தே தீருவோம். சில சாதனைகள் செய்து பன்னெடுங்காலம் இருந்தோரும் முடிவில் மடிவர். தேவரும் மூவரும் சித்தரும் முத்தரும் மடிவர் என்றால் அற்பர்களாகிய நாம் மடிவதில் என்ன ஐயப்பாடு? அதை மறந்து மெத்தனமாக இருக்கின்றோம்.

மரணபயம் விரைந்து நம்மை வெருட்டுகின்ற இத்தருணத்தில் நாம் அவசரமாகச் செய்ய வேண்டியது எது?

நெடுங்காலம் இருக்க வேண்டும் என்று விரும்புவது சரியன்று. இந்த உடம்பு மிகவும் கனமானது. மலஞ்சோரும் ஒன்பது ஓட்டைகளும், பல நோய்களுக்கு இருப்பிடமும் ஆனது; நாம் இதைச் சுமக்கவில்லையானால் நான்கு பேர் சேர்ந்து சுமக்க வேண்டும். ஆகவே இந்த உடம்புடன் இருக்க ஆசைப்படக்கூடாது. ''வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப ஆற்றேன்'' என்கின்றார் மணிவாசகனார். இந்த உடம்புடன் கூடியிருக்கின்ற நாம் அவசரமாகச் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும்.

எமக்கு மூன்று உறுப்புக்கள் இருக்கின்றன. அவையாவன:

1. சாங்கம்:— (பிரிக்கமுடியாத உறுப்பு) கரசரணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உபாங்கம்.— (பிரிக்கத்தக்க உறுப்பு) ஆடை அணிகலன்கள்.

3, பிரத்தியங்கம்:— (பிரிந்தே இருக்கும் உறுப்பு) நாம் வைத்திருக்கும் பாத்திரம் பண்டங்கள்

நமக்கு ஒரு பெரிய ஆபத்து வருங்கால் நாம் எதனை அவசரமாகக் காப்பாற்ற வேண்டும்? என்பதைச் சிந்தியுங்கள். ஒரு யானை விரட்டுகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். சாங்கமாகிய கைகால்களுக்கு வரும் ஆபத்தைத் தவிர்ப்பதா? உபாங்கமாகிய ஆடை அணிகலன்களுக்கு வரும் ஆபத்தைத் தவிர்ப்பதா? பிரத்தியங்கமாகிய பாத்திரம் பண்டங்களுக்கு வரும் ஆபத்தைத் தவிர்ப்பதா? பாத்திரம் பண்டத்திலும், ஆடை அணியிலும், கரசரணங்கள் முக்கியமல்லவா? அவைகளையல்லவா அவசரமாகக் காப்பாற்ற வேண்டும். கைகால் ஒடிந்தாலும் கவலையில்லை; பாத்திரம் பண்டங்கள் பழுதுபடக்கூடாது என்று எண்ணுபவன் அறிவை நாம் என்ன என்று எண்ணுவது?

இனி நாம் என்பது இந்த உடம்பு அன்று. உடம்பு நாம் குடியிருக்கும் வீடு. நாம் என்பது ஆன்மா,

ஆன்மாவுக்குச் சாங்கம் எது? உபாங்கம் எது? பிரத்தியங்கம் எது? என்று சிந்திக்க வேண்டும். ஆன்மாவுக்குச் சாங்கம் அறிவு.

உடம்புக்குக் கரணங்கள் அன்னியமாகாததைப்போல்; ஆன்மாவுக்கு அறிவு அன்னியமன்று; ஆன்மாவுடன் அறிவு பிரிவற நிற்பது. அரிசிக்கு வெண்மை நிறம் இயல்பு. ஆனால் தவிடு மூடியிருக்கின்றது. தவிடு போக அரிசியைக் குத்தினால் அரிசிக்கு இயல்பாகிய வெண்மை நிறம் தானே வெளிப்படுகின்றது.

அதுபோல் ஆன்மாவுக்கு அறிவு இயல்பானது. அந்த அறிவை ஆணவமாகிய தவிடு மூடியிருக்கின்றது. ஆணவ அழுக்கு நீங்கினால் ஆன்மாவுக்கு இயல்பாகவுள்ள அறிவு விளங்கித் தோன்றும்:

ஆன்மாவுக்கு உபாங்கம் — உடம்பு
,, பிரத்தியங்கம் — மனைவி, மக்கள், வீடு, நிலம், பொன் முதலியன.

இப்பொழுது சிந்தியுங்கள். ஆன்மாவுக்கு சாங்கமாகிய அறிவு விளக்கமுற வேண்டுமென்று நாம் முயல்கிறோமா? இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபாங்கமாகிய உடம்புக்காகச் சிறிது பாடுபடுகின்றோம். இனி பிரத்தியங்கமாகிய மனைவி மக்களுக்காகவும், வீடு நிலங்களுக்காகவும், பொன் பொருள்களுக்காகவுந்தான் முழுநேரமும் செலவழிக்கின்றோம். நிலம் பொன் இவைகளுக்கு இடர் வருமாயின் அவைகளை வளப்படுத்தும் வழக்கறிஞர்களுக்கு ஆயிரக் கணக்கான பொருள் வழங்குகின்றோம்.

உபாங்கமான உடல்நலங் குன்றுவதையுங் கூடப் பொருள் படுத்தாமல் பொன் தேடுகின்றோம்.

உபாங்கமான உடம்பை ஒரே ஒரு சமயத்திலே கவனிக்கின்றோம். அதற்கு நோய் வந்தால் மருத்துவருக்கு நூறு, இருநூறு தந்து உடலைப் பாதுகாத்துக் கொள்ளுகின்றோம்.

சாங்கமாகிய அறிவின் வளர்ச்சியைப் பற்றிய சிந்தனை சிறிதேனுமில்லை, அதனை வளர்க்குங் குருநாதனைத் தேடுவதுமில்லை, வறிதே வாழ்நாள் கழிந்தால் பின்னர் மரணமென்ற வெள்ளம் வந்துவிடுமே. அவ்வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டாமா? ஆகவே அவசரமாக நாம் ஒவ்வொருவரும் அறிவின் வளர்ச்சிக்காக அறிவு நூல்களைக் கற்றும், அறிவின் சிகரமாகிய ஆன்றோரை யடுத்தும், அறிவின் வடிவாகிய ஆண்டவனை வேண்டியும் உய்வு பெறுவோமாக.

- திருமுருக கிருபானந்தவாரியார்

# மூந்நூச் சிதறல்

எவன் எங்கு என்னைக் காண்கின்றானோ, எவன் எல்லாவற்றையும் என்னிடத்தே காண்கின்றானோ அவனுக்கு நான் ஒருபோதும் இல்லாமதிருப்பதில்லை. எனக்கும் அவன் ஒருபோதும் இல்லாமல் போகமாட்டான்.

(அத். 6 - சு. 30)

உள்ளது ஒன்றே என்று உறுதி கொண்டு எல்லா உயிர்களிலும் இருக்கின்ற என்னைப் போற்றும் யோகி எப்பாங்கில் இருப்பினும் என்னிடத்து இருப்பவன் ஆகின்றான்.

(அத். 6 - சு. 31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய ஒழுக்கத்தை விடாதவனும், மனதில் சாந்தம் பெறாதவனும், இந்திரியங்களை அடக்காதவனும், ஆசை எண்ணங்களை விடாதவனும் அறிவு பெற்றாலும் ஆத்மாவைக் காணமாட்டான்.

சடோப நிஷத் (2 - 21)

பண்பாடென்பது ஆபரணமல்ல. அது ஒரு நாட்டின் குணத்தை வெளிப்படுத்துவது. அதே சமயத்தில் நாட்டின் குணத்தை உருவாக்கும் சக்தியும் வாய்ந்த கருவி செம்மையான வாழ்வே பண்பாட்டின் முடிவு.

- ஸாமர் ஸேட்மாம் -

குழப்பமில்லாமல் வாழவேண்டுமானால் அதற்குத் தேவை ஒழுங்குமுறை. இது இருந்தால் பொறுமை பிறக்கும். பொறுமை பிறந்தால் வாழ்க்கையில் அழகு பிரகாசிக்கும் அழகு ஆகியவை பிரகாசிக்கும்போது அன்பு, தூய்மை, நேர்மை, மனித நேயம், அறிவு வெளிப்பட்டு வாழ்க்கை இன்பமாகும்.

- ஜேம்ஸ் ஆலன் -

மதிப்பு என்பது பதவிகளைப் பெற்றிருப்பதைப் பொறுத்ததன்று. அவற்றைப் பெறத் தகுதி உள்ளவர்களாக இருப்பதைப் பொறுத்ததே.

அரிஸ்டோட்டில்

நாம் மேல்நாட்டுக்காரர்கள் மாதிரி போகபோக்கியங்களுக்காகப் பறக்கின்றோம். போகத்தின் உச்சிக்குப் போன மேல் நாட்டுக்காரர்களோ அதில் நிறைவே இல்லை என்பதால் நம்முடைய யோகத்துக்கு, வேதாந்தத்துக்கு, பக்திக்கு கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கிறார்கள். இதைப் பார்த்துக்கூட நாம் பக்தி பெறவில்லை, புனிதப்படவில்லை என்றால் அதுதான் துர் அதிஷ்டம்.

காஞ்சிப் பெரியவர் 1993 மே ஞானபூமி

தீய சிந்தனைகளுக்கும், துர் எண்ணங்களுக்கும் நாம் இடம் கொடுத்து விடுவதாய் இருந்தால் நம்மை மனிதரென்று சொல்லிக் கொள்ள வேண்டியதில்லை. பிறப்பில் மனிதராயிருந்தாலும் குணத்தில் மிருகங்கள்தான்.

- மகாத்மா காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையில்லாத அரசியல், அறிவுத் தெளிவில்லாத போகம், உழைப்பில்லாத செல்வம், நேர்மை இல்லாத அலுவல், மனித தத்துவம் இல்லாத விஞ்ஞானம், தியாகம் இல்லாத கடவுள் வழிபாடு இவையனைத்தும் எங்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

– மகாத்மா காந்தி

அணுக்குண்டாக்கப் போட்டி வேண்டாம்
அன்பு செய்யவே உலகில்
அனைத்து நாட்டு அறிஞர் எல்லாம்
ஆர்வம் காட்டுவீர்
துணிச்சலோடு முயன்று நின்றால்
நாங்கள் வாழுவோம் — இதனைச்
சொல்லவே நாங்கள் வந்ததும் உமக்குச்
சிறுமை அல்லவா.

உண்மையை ஆராய முடியாதவன் குருடன். ஆராய மனமில்லாதவன் மடையன். ஆராய அஞ்சுபவன் அடிமை.

சட்டம் என்பது பூரணமான நீதியை வழங்குமென எதிர்பார்க்கமுடியாது. அது நீதியைப் பெறுவதற்கான அணுகுமுறை மட்டுமே,

இன்பத்திற்கு துணையாக யாராலும் முடியும். ஈ, எறும்பாலும் முடியும். தேவையானது கிடைக்கும்போது ஈ, எறும்பும் நம்மைக் கேளாமலே மொய்க்கின்றன. அது போலவே யார் வேண்டுமானாலும் வந்து மொய்த்துக் கொள்வார்கள். ஆகையால் இன்பத்துக்கு துணையாக வல்லவரை நம்பாதே. துன்பத்திற்கு துணையாக இருக்க வல்லவரைத் தேடு. உறவானாலும் நட்பானாலும் காதலன் காதலியானாலும் இப்படித்தான் தேடவேண்டும்.

மனம் சீர்ப்பட்டால்தான் சீர்ப்பட முடியும். மாற்றுவழி ஒன்றுமே இல்லை. எல்லாம் ஏமாற்றம்தான்.

ஆசை தீரவென்று தொடங்கும் வாழ்க்கை அல்லல்படும் வாழ்க்கை. ஆசை தீர்வது ஒரு நாளும் இல்லை. இரத்தம் குன்றினாலும் எண்ணம் குன்றுவதில்லை.

நல்லதையும் செய்துவிட்டு அதனால் வரும் பொல்லாப்பையு ஏற்றுக் கொள்பவனே மனிதருள் மாணிக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை

உலகியல் வாழ்க்கையின் இனிய வசந்தத்தைக் கண்டு களித்து, உண்டு, உயிர்த்து இன்புற்று வாழ விரும்பும் ஒவ்வொரு மனித உள்ளமும், பச்சைப் பசேலென வளர்ந்த பயிர்களிடையே தோன்றும் களைகளைக் களைவது போன்று தாம் தாம் கடந்த காலத்தில் பெற்ற கசப்பான அனுபவங்களைக் களைந்து விடுவதோடு, கற்பனாகாத வருங்காலத்தின் நிலைப்பாட்டை நினைந்து நினைந்து ஏங்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியையும் அனுபவித்து இன்புற்றிருக்க வேண்டுமாயின நம்முடைய எண்ணங்கள் ஒளிமிக்கனவாகவும், நம்பிக்கையூட்டுபவையாகவும், திண்மையுடையனவாகவும் இருக்க வேண்டுமென்பதை.

'' எண்ணிய வெண்ணியாங் கெய்துவ லெண்ணியார்
திண்ணியராகப் பெறின் ''

என்ற வள்ளுவர் வாக்கு வன்மையூட்டி நிற்பது போன்று

'' எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும் ''

என அழுத்திக்கூறும் பாரதியின் பாடல் வரிகளையும் சீர்தூக்கிப் பாருங்கள்.

பருவத்தே பயிர் செய் என்பது போல நிகழ்காலத்தில் நம்மை நாம் எவ்வகையில் தயார் செய்து கொள்கின்றோமோ, அது எம்மை எதிர் காலத்தில் உயர்த்திச் சென்று ஒளிமயமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நன்மையும் தீமையும் பிறர்தர வருவதில்லை. நம் உள்ளங்களில் உருவாகும் எண்ணங்களே மகிழ்வையூட்டுகின்றன. அவ்வாறான மகிழ்ச்சியைப் பெறுவதும் அல்லது துறப்பதும் எமது கையிலேயே தங்கியுள்ளது. உயிரினங்களிடையே இயல்பாகக் காணப்படுகின்ற தேவையற்ற கற்பனைகள், அர்த்த புஷ்டி இல்லாத பயங்கள், பலவீனங்கள், தாழ்வு மனோபாவங்கள், வக்கிர புத்திகள், என்பவற்றைக் களைந்து விடவேண்டும். பலவிதமான துன்பங்களுக்கு வரையறையற்ற கற்பனைப்போக்கு விதை நிலமாகின்றது. மனித உள்ளங்களிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் எத்தனை! எத்தனை! வேறுபாடுகள். விருப்பு வெறுப்புக்கள். இவற்றின் விளைவுகளால் தோன்றும் வெவ்வேறுபட்ட அநுபவங்கள். இவையெல்லாம் எண்ணங்களின் விளைவுகளேயன்றி வேறேது. பணத்துக்காக வாழ்பவர் ஒருபக்கம். வாழ்வுக்காக பணத்தைத் தேடுபவர் ஒருபக்கம். பணம்தான் வாழ்வென்று கருதுபவர்க்கு அது வந்த பின்னரும் மகிழ்வாக வாழ முடிகிறதா? சிலருக்கு சிலதேவைகள் அல்லது பொருட்கள் கிடைத்தால்தான் வாழ்வு வளம்பெறும் என்பது அவர்களுடைய நம்பிக்கை அது கிடைத்தவர்களில் எத்தனைபேர் மகிழ்வாக இருக்கிறார்கள்.

உள்ளம் என்பது மென்மையான கருவி. தந்தியில்லாத வீணை சுரந்தருவதில்லை. அதுபோன்று நல்லெண்ணங்கள் உருவாகாத மனதில் மகிழ்ச்சி இல்லை. இனியவை உருவாகின்ற இன்பசுரங்கமான உள்ளத்தில் மகிழ்ச்சியை பெற முடியுமானால் நாமேன் துன்பங்களை நாடியோட வேண்டும்? நிகழ்காலத்தின் நிலையுணர்ந்து தூய சிந்தனையுடனும், புரிந்துணர்வுடனும் செயல்பட வேண்டுமென்ற உறுதிப்பாடு நம் உள்ளங்களில் தோன்றுமாயின் எமது ஆர்வங்களும் நம்பிக்கைகளும் ஆதவனைக் கண்டு சிரிக்கும் பங்கயம் போன்று மலர்ந்து மணம் வீசும்.

வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்த வேண்டும். இன்பமாய் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டுமென்று துணிபவர்களுக்கு எத்தனையோ மார்க்கங்களுண்டு. ஆகவே இயற்கையின் மடியில் வாழும் நாம சூரியன் மறைந்து விட்டதே என்று சோர்ந்து விடக் கூடாது. நிலவானது நல் இரவிலும் ஒளிரும். இல்லாவிட்டால் கண் சிமிட்டும் நட்சத்திரங்களாவது மின்னிக் கொண்டிருக்கும். என்ற நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது.

சௌந்தரம்

அற்ற குளத்து அறுநீர் பறவைபோலல்லாது ஒட்டியும்,
ஆம்பலும் போல உறவல்ல நட்பும், உறவுமே வேண்டற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOOD ADVICE

Time is Gold

Always do your Best

Duty first others next.
or
Duty first Beauty next.

Always speak the truth.

Keep good company or none.

Good character is above all things else.

Honesty is the best policy.

When you speak to a pearson look him in the face.

Never be Idle. if you hands can't be empleyed.

Usefully attend to the cultivation of your mind.

Lets all be happy. Lets all be healthy.

Let all see the face of happiness.

Let no one be unhappy, peace! peace! peace!

Be good do good.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் அருளிச்செய்த
# ஆத்தி சூடி

## கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே
We will praise and worship often God Ganesha the beloved Son of Siva who wears garlands of athi flowers.

01) அறஞ் செய விரும்பு
Love rightousness

02) ஆறுவது சினம்
Subdue wrath

03) இயல்பது கரவேல்
Do not with hold what you can afford to give

04) ஈவது விலக்கேல்
Hinder not another's kift

05) உடையது விளம்பேல்
Do not proclaim your worth

06) ஊக்கமது கைவிடேல்
Do not give up perseverahce

07) எண்ணெழுத் திகழேல்
Do not scorn numbers and letters

08) ஏற்ப திகழ்ச்சி
Begging is contemptible

09) ஐய மிட்டுண்
Give alms and eat

10) ஒப்புர வொழுகு
Confirm to the ways of the wise

11) ஓதுவ தொழியேல்
Cease not to learn

12) ஔவியம் பேசேல்
Do not speak words of envy.

13) அஃகஞ் சுருக்கேல்
Do not use short corn measures

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) கண்டொன்று சொல்லேல்
Do not speak differently from what have seen

15) ஙப்போல் வளை
Be as the letter "ங" supporting all you kin

16) சனி நீராடு
Take oil - bath on saturday

17) ஞயம்பட உரை
Speak weetly

18) இடம்பட வீடெடேல்
Do not build too big a house

19) இணக்க மறிந் திணங்கு
Be frind after proper knowledge and understanding

20) தந்தை தாய் பேண்
Protect your parents

21) நன்றி மறவேல்
Do not forget good done

22) பருவத்தே பயிர் செய்
Cultivate in season

23) மன்று பறித் துண்ணேல்
Do not live by litigious robbery

24) இயல்பலாதன செயேல்
Do not anything improper

25) அரவ மாட்டேல்
Refrain from snake charming

26) இலவம் பஞ்சிற்றுயில்
Sleep on a matrese of silk cotton

27) வஞ்சகம் பேசேல்
Do not speak words of deceit

28) அழகலாதன செயேல்
Do nothing unbecoming

29) இளமையிற் கல்
Learn while you are young

30) அறனை மறவேல்
Do not forget your duty

31) அனந்த லாடேல்
Do not sleep too much

32) கடிவது மற
Do not speak harsh words to anybody

33) காப்பது விரதம்
Keep the vow

34) கிழமைப்பட வாழ்
Live for others

35) கீழ்மை யகற்று
Refrain from what is low and mean

36) குணமது கைவிடேல்
Do not forsake what is good

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37) கூடிப் பிரியேல்
Do not part from friends

38) கெடுப்ப தொழி
Refrain from evil - doing

39) கேள்வி முயல்
Listen and learn

40) கைவினை கரவேல்
Do not despise handicraft

41) கொள்ளை விரும்பேல்
Do not desire plundes

42) கோதாட் டொழி
Give up oftensave sport

43) சக்கர நெறி நில்
Obey the law of your country

44) சான்றோ ரினத்திரு
Assobiate with wise people

45) சித்திரம் பேசேல்
Do not speak words of deception

46) சீர்மை மறவேல்
Do not forget what is excellent

47) சுளிக்கச் சொல்லேல்
Do not speak to provoke

48) சூது விரும்பேல்
Do not desive gambling

49) செய்வன திருந்தச் செய்
Whatever yon do. do it well

50) சேரிடமறிந்து சேர்
Associate with worthy people

51) சையெனத் திரியேல்
Do not voam acout to be childden

52) சொற் சோர்வு படேல்
Do not become forgetfull in your syeach

53) சோம்பித் திரியேல்
Do not by lazy

54) தக்கோனெனத் திரி
Move so as to be esteemed

55) தானமது விரும்பு
Love to give gifts

56) திருமாலுக்கு அடிமை செய்
Worship Vishnu

57) தீவினை யகற்று
Refrain from doing evil

58) துன்பத்துக் கிடங்கொடேல்
Do not give room to trouble

59) தூக்கி வினை செய்
Ponder befor you act

60) தெய்வ மிகழேல்
Do not despise God

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61) தேசத்தோடொத்து வாழ்
Live in harmong with your country men

62) தையல் சொற் கேளேல்
Do not listen to women without education

63) தொன்மை மறவேல்
Forget not your tradition

64) தோற்பன தொடரேல்
Do not engage in a failing cause

65) நன்மை கடைப்பிடி
Hold fast that which is good

66) நாடொப்பன செய்
Do what the people with approve

67) நிலையிற் பிரியேல்
Do not fail from your status

68) நீர் விளையாடேல்
Do not sport in deep waters

69) நுண்மை நுகரேல்
Do not indulge in delecacies

70) நூல் பல கல்
Study many sciences

71) நெற்பயிர் விளை
Cultivate paddy

72) நேர்பட வொழுகு
Act uprightly

73) நைவினை நணுகேல்
Do not ettempt what afflicts others

74) நொய்ய வுரையேல்
Do not speak trivialities

75) நோய்க்கிடங் கொடேல்
Lay not yourself open toilness

76) பதிப்பன பகரேல்
Speak not to be despised

77) பாம்பொடு பழகேல்
Play not with the snake

78) பிழைபடச் சொல்லேல்
Do not speak with fault

79) பீடு பெற நில்
Keep up your dignity

80) புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
Protect your dependents who propitiate you

81) பூமி திருத்தியுண்
Live by cultivating the soil

82) பெரியாரைத் துணைக்கொள்
Seek the help of the great

83) பேதமை யகற்று
Wipe out ignorance

84) பையலோ டிணங்கேல்
Do not associate with the valgar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85) பொருடனைப் போற்றிவாழ்
Protect your wealth and prosper

86) போர்த் தொழில் புரியேல்
Proroke no quarrel

87) மனந் தடுமாறேல்
Be not perplexedin mind

88) மாற்றானுக்கு இடங்கொடேல்
Give no room to your foeman

89) மிகைபடச் சொல்லேல்
Do not speak too much

90) மீதூண் விரும்பேல்
Love not too much food

91) முனைமுகத்து நில்லேல்
Be not idle in the fighting ranks

92) மூர்க்க ரோடிணங்கேல்
Do not associate with the wicked

93) மெல்லினல்லாள் தோள் சேர்
Live with your own wife Do not go after strange women

84) மேன்மக்கள் சொற்கேள்
Listen to the wores of the wise people

95) மைவிழியார் மனையகல்
Aviod the houses of prostitules

96) மொழிவதற மொழி
Speak decisively

97) மோகத்தை முனி
Give up passion

98) வல்லமை பேசேல்
Do not boast your parts

99) வாது முற்கூறேல்
Be not forward to challenge combats

100) வித்தை விரும்பு
Lova learning

101) வீடு பெற நில்
Work for salvation

102) உத்தமனாயிரு
Be thou noble

103) ஊருடன் கூடிவாழ்
Live in harmony with your follow Citizens

104) வெட்டெனப் பேசேல்
Do not speak bluntly

105) வேண்டி வினை செயேல்
Do not act with an eye to the return

106) வைகறைத் துயிலெழு
Wake up before sunrise

107) ஒன்னாரைத் தேறேல்
Associate not with enemies

108) ஓரஞ் சொல்லேல்
Be not partial and unjust

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாக நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாக நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாகவே நடக்கும்
உன்னுடைய எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ அது நாளை
மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இது உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமாகும்

**பகவான் ஸ்ரீகிருஷ்ணா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வம்சாவழி

இலகுப்பிள்ளை + அகிலாண்டம்

- விசுவநாதர்
- **மயில்வாகனம்**
- நாகலிங்கம்
- நாகமுத்து

கந்தையா + இளையபிள்ளை

- சின்னம்மா
- இரத்தினம்
- **கனகம்மா**
- இராசம்மா

**மயில்வாகனம்** + **கனகம்மா**

- லலிதாதேவி + சர்வேஸ்வரன்
  - சிவசுதன்
- தெய்வேந்திரம்
- கலாதேவி + கமலநாதன்
  - அபிசங்கர்
  - ஜீவசங்கர்
  - பிரியங்கா
- குலதேவி + சித்திராங்கன்
  - கரீன்
  - ரஜீவ்
  - ஸ்ரிபனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

" தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக
கொள்வர் பயன் தெரிவார் "

– பொய்யாமொழிப் புலவர்



# நன்றி நவிலல்

**அமரர் ம. கனகம்மா** அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லம் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தந்திகள், தொலைத்தொடர்புகள் மூலம் அனுதாபமும், ஆறுதலும் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும், அன்னாரின் இறுதிச் சடங்குகளில் பங்கு கொண்ட அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும், அமரரவர்களின் அந்தியேட்டி கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்ட அன்புள்ளங்களுக்கும், மேற்படி நிகழ்வுகள் யாவற்றையும் சிறப்புற நடாத்துவதற்கு உதவிக்கரம் தந்த அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள் என்றென்றும் உரித்தாகுக.

வல்லை வீதி,
சங்கானை.

இவ்வண்ணம்
( ம. தெய்வேந்திரம் )
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org